27.01.2026

அ.வ.எண். 125/2023

வா.சா.1 – திரு.ஆறுமுகம், த/பெ.வேலப்ப கவுண்டர்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 27.01.2026 is accordance with the provision of Act X of 3331

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பீடம்பள்ளி கிராம புல எண்.18/1 ல் உள்ள கிணற்றில் உள்ள 1/8 பாகத்தை இடையூறு செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மேற்படி கிணற்றில் 1/8 பங்கு உள்ளது என்றால் சரிதான். 8 நாட்களுக்கு ஒரு முறை தனித்தனியாக தண்ணீர் ஓட்டிக்கொள்கிறோம். அதில் ஒரு விவசாய மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். தண்ணீர் பைப் லைனில் காட்டுக்குள் கேட் வால்வு உள்ளது. மேற்படி கேட் வால்விலிருந்து அவரவர்கள் பங்கிற்கு தண்ணீர் பாய்ச்சி கொள்கிறோம் என்றால் சரிதான். மேற்படி கிணற்றிலிருந்து தண்ணீர் கேட் வால்விலிருந்து தனித்தனி பங்கிற்கு சுமார் 10 – 15 ஆண்டுகளாக தண்ணீர் பாய்ச்சிக் கொள்கிறோம் என்றால் சுமார் 10 ஆண்டுகள் இருக்கும்.

2. தற்போது புல எண்.18/1 ல் உள்ள கிணற்றில் எத்தனை மோட்டார் உள்ளது என்றால் மொத்தம் 3 மோட்டார்கள் உள்ளது. 1. விவசாய மோட்டார், 2. என்னுடைய வீட்டு உபயோகத்திற்கு உள்ள மோட்டார், 3. எனது சகோதரர் அய்யாசாமியின் தனியாக மோட்டார் வைத்துள்ளார். அவர் தொழிற்சாலைக்கு பயன்படுத்தி வருகிறார்.அவருக்கு தனியாக மின் இணைப்பு உள்ளது. புல எண்.18/1 ல் உள்ள கிணற்றில் இருந்து நானும், எனது சகோதரரும் தனி மோட்டார் வைத்து தண்ணீர் எடுக்க மின் இணைப்பு பெற்றுள்ளோமா என்றால் தொழிற்சாலை மின் இணைப்பில் என் சகோதரர் நீர் எடுத்து வருகிறார். நான் என் வீட்டு மின் இணைப்பில் இருந்து நீர் எடுத்து உபயோகப்படுத்தி வருகிறேன்.

3. நானும், என் சகோதரரும் வைத்துள்ள மோட்டார் இன்றைய தேதி வரை உபயோகத்தில் உள்ளது என்றால் சரிதான். பொதுவான கிணற்றில் தனியாக மோட்டார் வைக்க மற்ற பங்கு தாரர்களிடம் அனுமதி பெற்றுள்ளேனா என்றால்

என்னுடைய முறையில் தண்ணீர் எடுக்க மோட்டார் வைத்துள்ளேன். என்னுடைய முறையில் நீர் எடுக்க பொது மின் இணைப்பு மூலமாக தான் நீர் எடுக்க வேண்டும் என்றால் இல்லை. தமிழ்நாடு மின்சார வாரியத்தால் தனித்தனியாக மோட்டார் வைத்ததற்காக என் மீது அபராதம் விதிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தனியாக வைத்துள்ள மின் மோட்டாரை நீக்க வேண்டி உத்தரவிட்டுள்ளனர் என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் கொடுத்த ஆட்சேபணை மனுவின் பெயரில் தான் எனக்கு அபராதம் விதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. நான் அபராதத்திற்கு பின்னிட்டு தான், இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி-அட்டவணையில் உள்ள பாதையை இடையூறு செய்ததாக சொல்வது தவறு என்றும், பிரதிவாதிகள் மேற்படி தடத்தை தான் உபயோகித்து வருகிறார்கள் என்றால் வாதி, பிரதிவாதிகள் தடத்தை உபயோகப்படுத்தி வருகிறோம், தற்போதும் தடத்தை பயன்படுத்தி வருகிறோம். தற்போது லாரி, மேற்படி தடத்தில் சென்று வருகிறது என்றால் சரிதான். கிணற்றின் அருகே உள்ள தொட்டியில் தண்ணீர் விடுவதில்லை என்றால் பிரதிவாதிகள் தொட்டியை உடைத்ததால் தண்ணீர் விட முடிவதில்லை.

5. 10 வருடங்களாக தொட்டியை பயன்படுத்தாததால் தொட்டியானது சிதிலமடைந்துள்ளது என்றும், நான் சொன்னவாறு பிரதிவாதி தொட்டியை சேதப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பொதுப்பயன்பாட்டில் உள்ள பைப் லைனை உடைக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் பைப் லைன் உடைக்கப்பட்டது. வழக்கறிஞரும், நானும் சென்றபோது என்னை திட்டி, தடத்தில் செல்வதை தடுத்தனர் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. வெயில் காலங்களில் 4-5 மணி நேரம் நீர் ஓடி பின்னிட்டு வற்றிவிடும் என்றால் தற்போது இல்லை.

6. நானும், என் சகோதரரும் மோட்டார் வைத்துள்ளதற்கு மின்சார வாரியத்தில் அனுமதி பெற்றுள்ளோமா என்றால் மின்வாரிய விதிகளின் படி அனுமதி உள்ளது. நான், தனிப்பட்ட மோட்டார் வைத்து எனக்கு பாகம் இல்லாத நாளில் தண்ணீர்

பாய்ச்சியதால் பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்தனர் என்றால் இல்லை.நான், தனிப்பட்ட முறையில் மோட்டார் வைத்ததை பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்து எனக்கு அபராதம் விதிக்கப்பட்டதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை, ஓடிக்கொண்டிருந்த மோட்டாரை பலவந்தமாக நிறுத்திவிட்டார்கள்.

7. தனிப்பட்ட முறையில் வைத்துள்ள மோட்டாரை வழக்கு சொத்தாக காண்பிக்கவில்லை என்றால் சரிதான். தண்ணீர் எடுப்பதாக சொல்லியுள்ளேன். விவசாய மோட்டாரை தான் நிறுத்தினார்கள். நான் சொல்வது போல், விவசாய மோட்டாரை நிறுத்தவில்லை என்றும், எனக்குள்ள 1/8 பங்கு விவசாய உபயோகத்தை பிரதிவாதிகள் தடுக்கவில்லை என்றால் விவசாய மின் இணைப்பு மூலமாக தண்ணீர் எடுப்பதை பலவந்தமாக தடுத்தனர், ஓடிக்கொண்டிருந்த மோட்டாரை நிறுத்தினர். மேற்படி கிணற்றில், எங்களது குடும்பம் 50 ஆண்டுகளுக்கு மேலாக 1/8 பாகம் தண்ணீர் பாய்ச்சி கொண்டுள்ளோம். இந்த வழக்கு தாக்கல் செய்யும்வரை யாரும் தடுத்ததாக வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. நான் தனிப்பட்ட முறையில் மோட்டார் வைத்துள்ளதை காப்பதற்காக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 நான் கொடுத்த புகாரில் உள்ள புகைப்படத்தில், தொட்டியானது சிதிலமடைந்துள்ளது என்றால் சரிதான்.

**<u>4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

_Sd.M.Santhosham

District Munsif, Sulur